DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII code of criminal procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ERODE.

STC. No. 2282/2019

Deposition of witness for P.W. 3

| | | | |
|---|---|---|---|
| Name | : அமராவதி | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 08-12-2020

முதல் விசாரணை

நான் பெருந்துறை வாய்க்கால் மேட்டில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 2018 ம் வருடம் எனது தம்பியை பார்ப்பதற்காக நானும், புஷ்பாவதி, தினேஷ், காஞ்சனா ஆகியோர் அவருடைய வீட்டிற்கு சென்றோம். எனது தம்பியை அவருடைய மகன் சுகேஷ் அடித்துவிட்டதாக தகவல் கூறினார். நான் சம்பவ இடத்தில் இருந்தேன். சுகேஷ் என்பவர் குச்சியை கொண்டு அவருடைய அப்பாவை அடித்துவிட்டார். காஞ்சனா என்பவர் சம்பவத்தை தடுத்தபோது சுகேஷ் அவரை எட்டி உதைத்துவிட்டார். தினேஷ் மற்றும் காஞ்சனா ஆகியோருக்கு காயம் ஏற்பட்டது. அவர்கள் ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றார்கள். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது தம்பி சம்சாரம் மற்றும் மகன் ஆவார். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்குவிசாரணை

1 ம் எதிரி எனது தம்பி மனைவி மற்றும் 2 ம் எதிரி என்னுடைய தம்பியின் மகன் என்றால் சரிதான். என் தகப்பனாருக்கு 4 பெண்கள் மற்றும் 1 ஆண் என்றால் சரிதான். என் தம்பிக்கும் அவருடைய மனைவிக்கும் இடையே கருத்து வேறுபாட்டால் சில காலம் பிரிந்திருப்பார்கள் மற்றும் சில காலம் சேர்ந்திருப்பார்கள் என்றால் சரிதான். சொத்து சம்மந்தமாக முதலாவது அமர்வு நீதிமன்றத்தில் 2 ம் எதிரி அவருடைய அப்பா மீது வழக்கு போட்டிருந்தார் என்றும் அதில் நானும் ஒரு தரப்பினர் என்றால் சரிதான். நாங்களும் பாகப்பிரிவினை கேட்டு ஒரு சிவில்வழக்கு போட்டோம் என்றால் சரிதான். என் தகப்பனாரின் சொத்தில் எங்களுக்கு பாகம் கொடுக்காமல் என் தம்பி மனைவியும்

அவருடைய மகன்களும் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். சொத்து பாகம் கேட்டு அதை கொடுக்கவில்லை என்பதில் எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையே மனஸ்தாபம் என்றால் சரிதான். நானும் என் சகோதரியும் ஒரு தரப்பிலும் எதிரிகளும் ஒரு தரப்பிலும் உள்ளோம் என்றால் சரிதான். சம்பவத்தன்று உறவினர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். இறப்பு சம்பவத்திற்கு நாங்கள் சென்றபோதுதான் ராஜேந்திரன் போன் செய்து சம்பவம் குறித்து சொன்னார் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது என் தம்பி காயத்துடன் இருந்தார் என்றால் சரிதான். என் சகோதரி மகன் தினேசுக்கு போன் செய்த பிறகு தினேஷ் வந்தார் என்றால் சரிதான். நானும் எனது சகோதரியும் புகார் கொடுப்பது சம்மந்தமாக ஆலோசித்தோம் என்றால் சரிதான். தாலூக்கா காவல் நிலையம் சென்றோம் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் ஒவ்வொருவரும் ஒரு புகார் எழுதி கொடுத்தோமா என்று கேட்டால் இல்லை. நடந்ததை மட்டும் சொன்னோம். நான் சொன்னதை போலீசார் எழுதி கொண்டார்கள். அதில் நான் கையெழுத்து போடவில்லை. தினேசும் காஞ்சனாவும் கையெழுத்து போட்டார்கள். மருத்துவமனையில் சென்ற பிறகு தான் காவல் நிலையத்திற்கு சென்றோம். நாங்கள் எதிரிகளை தாக்கியதாக அவர்கள் எங்கள் மீது புகார் கொடுத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் இருக்கும் போது 1 வது எதிரி தமிழ்செல்வி காவல் நிலையம் வந்தாரா என்று எனக்கு தெரியாது. வீட்டிற்குள் விடமாட்டோம் என்று சொன்னதால் தகராறு ஆனதா என்றால் இல்லை. நான் சம்பவ இடம் சென்றபோது 10 நிமிடத்தில் தினேஷ் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார். நானும் அரசு மருத்துவமனைக்கு சென்றிருந்தேன். அரசு மருத்துவமனையில் போலீசார் இருந்தார்கள் என்றால் சரிதான். அரசு மருத்துவமனையில் போலீசார் விசாரித்து கையெழுத்து வாங்கினார்களா என்றால் எனக்கு நினைவில்லை. நான் சொல்வதுபோல் ஒரு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் சிவில் வழக்கு முன்விரோதம் காரணமாக எதிரிகள் மீது பொய் வழக்கு கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.